### 4-வது முறையாக என்மீது நம்பிக்கை வைத்து வெற்றி வாய்ப்பை வழங்கியுள்ளீர்கள்!

# குன்னம் பகுதிக்கு என்றும் நன்றிக்கடன் பட்டவனாக, மக்கள் பணி செய்வேன்!

## முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர் எம்.எல்.ஏ. அறிக்கை!



பெரம்பலூர்,மே 29-

குன்னம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மேனாள் அமைச்சர், அரியலூர் மாவட்ட கழக செயலாளர் குன்னம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.சிவசங்கர் குன்னம் தொகுதி மக்களிடம் ஆண்டிமடம், குன்னம் தொகுதி வேட்பாளராக உங்களை நாடி வந்த எனக்கு, 4வது முறையாக என்மீது நம்பிக்கை வைத்து 'குன்னம்' பகுதி மக்கள், வெற்றி வாய்ப்பை வழங்கியுள்ளீர்கள்.

குன்னம் பகுதிக்கு என்றும் நன்றிக்கடன் உள்ளவனாக, மக்கள் பணி செய்வேன்.

மேலும் நான் இப்பகுதியில் அரசு அறிவியல் கல்லூரி, அரசுப் பேருந்து பணிமனை, ஆரம்ப சுகாதார நிலையம், 110 KV தரம் உயர்த்தப்பட்ட துணை மின் நிலையம்,

தரமான சாலை வசதி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, புதிய பேருந்து வசதிகள் என குன்னம் மக்களுக்கு ஏற்படுத்தி தந்துள்ளேன்.

எதிர்க்கட்சியாக இருந்தாலும் மக்களுக்கான குரலாக சட்டமன்றத்தில் நான் உங்களின் குரலாக ஒலித்திடுவேன் என கூறினார்.

பின்னர் தமது தொகுதிக்கு உட்பட்ட குன்னம் ஒன்றியம் மேலுசேன்நகரம், வேம்பமரம், கீழஉசேன்நகரம், அல்லிநகரம், குறிஞ்சிப்பாடி, தொண்டப்பாடி, சடைக்கன்பட்டி, சீத்தா ராம்புரம், மங்கலம், கீழமாத்தூர், அழகிரிப்பாளையம், வரிசைப்பட்டி, தங்கநகரம், மேலமாத்தூர், இலந்தகுழி, சீராநத்தம், மதுராகுடிகாடு, ஆதனூர், கொட்டரை, குரும்ப பாளையம், சாத்தனூர், சா.குடிகாடு, தெற்குமாதவி, நத்தகுடிகாடு, சிறுகன்பூர், வரகுபாடி, மலையப்பநகர், சமத்துவபுரம், காரை, தெரணி, புதுக்குறிச்சி உள்ளிட்ட கிராமங்களில் வீதி வீதியாக சென்று வாக்களித்த வாக்காள பெருமக்களுக்கு நன்றி கூறினார், பொதுமக்கள், கழக நிர்வாகிகள் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர்.

உடன் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் என்.கிருஷ்ணமூர்த்தி, தே.மு.தி.க. மாவட்ட செயலாளர் துரை சிவாஅய்யப்பன், வேப்பூர் தெற்கு கழக ஒன்றிய பொறுப்பாளர் சி.இராஜேந்திரன் தே.மு.தி.க. ஒன்றிய செயலாளர் செல்வராஜ், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன் மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# மதச்சார்பற்ற தன்மையை உறுதி செய்த - அறிஞர் அண்ணாவின் முற்போக்கான 'தமிழ்நாட்டின் அரசு ஆணை' வீழ்த்தப்படுகிறதா?



அறிஞர் அண்ணா காங்கிரஸ் ஆட்சியை அகற்றி 1967 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியை அமைத்தார்.

மக்கள் ஆட்சியின் மாண்பினை

மதச்சார்பற்ற கொள்கையினை

உயர்த்திப் பிடித்தார்.

தமிழ்நாட்டின் சட்டமன்ற வரலாற்றில் முதல் முறையாக 'கடவுள்' என்ற சொல்லிற்கு மாற்றாக 'உளமார' என்ற சொல்லைப் பயன்படுத்தி அறிஞர் அண்ணா தொடங்கி அனைத்து திமுக உறுப்பினர்களும் பதவி ஏற்றனர்.

2026 ஆம் ஆண்டிலும் திமுக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி தொடங்கி அனைத்து திமுக உறுப்பினர்களும்

மதசார்பற்ற மாண்பினைப் போற்றியுள்ளனர்.

நமது நாட்டில் மதங்கள், பல பல.

வழிபாட்டு முறைகள் வெவ்வேறானவை.

ஆனால் அரசு எல்லோருக்கும் பொதுவானது என்பது அறிஞர் அண்ணா காலத்தில் அரியணை ஏறியது.

எனவே மதச்சார்பற்ற உயரிய நெறியைப் பின்பற்றி அரசு அலுவலகங்களில் கடவுள்கள், படங்கள், சிலைகள் அகற்றப்பட ஓர் ஆணையை 1968 ஆம் ஆண்டு ஏப்ரல் 29 ஆம் நாளில் தலைமைச்செயலாளர் சி.ஏ.இராமகிருஷ்ணன் பிறப்பித்தார்.

எனது மூத்த அண்ணன் நரேந்திரன் தலைமைச் செயலகத்தில் அப்போது பொதுத் துறையில் உதவிச் செயலாளராகப் பணிபுரிந்தார்.

அப்போது தலைமைச் செயலகத்தில் பணியாற்றியவர்கள் இந்த அரிய நிகழ்வை "அண்ணா சொல்லி அய்யா பிறப்பித்த ஆணை" என்று மகிழ்ச்சியோடு வரவேற்றார்கள்.

இத்தகைய ஆணை இந்திய மாநிலங்களில் இன்று வரை எந்த மாநிலத்திலும் பிறப்பிக்காத முன்னோடியான, முன்மாதிரியான முற்போக்கான வழிகாட்டும் ஆணையாக ஒளிர்கின்றது.

'மதச்சார்பற்ற' என்ற சொல் 1976 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் நாள் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இடம் பெற்றது.

அதுவும் நெருக்கடி நிலைக் காலத்தில்!

1993 ஆம் ஆண்டில் செல்வி ஜெயலலிதா ஆட்சியில் அரசு அலுவலகங்களின் வளாகங்களில் எந்த மதத்தின் வழிபாட்டுத் தலங்கள் கட்டுவதையும் தடை செய்து மற்றொரு ஆணையும் வெளியிடப்பட்டது.

அறிஞர் அண்ணா பிறப்பித்த ஆணையை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்த போது, பல ஆண்டுகள் கழித்து இந்த ஆணை செல்லுபடியாகும் என்று தீர்ப்பும் வழங்கப்பட்டது.

இத்தகைய மதச்சார்பற்ற கொள்கையை வலியுறுத்தும் ஆணைக்கு எதிராகத் தலைமைச் செயலகத்தில் அமைச்சர்கள் தங்கள் அறைகளிலேயே மதச்சார்பினைப் போற்றுவது அறிஞர் அண்ணா பிறப்பித்த ஆணைக்கும், நீதிமன்றத்தீர்ப்பிற்கும் எதிரானது என்பதை உணர்வார்களா?

மதச்சார்பற்ற கொள்கையைப் பின்பற்றும் விஜய் அரசுக்கு ஆதரவு தரும் கட்சிகள் 'இது தவறானது, சட்டத்திற்கு எதிரானது' என்று உணர்த்துவார்களா?

பேராசிரியர்
மு.நாகநாதன்



### மயிலை கிழக்கு: பகுதிப் பிரதிநிதி

# டி.ரூப்நாத் - மஞ்சுளா பாய் மணி விழா!

## மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு வாழ்த்துரை!

சென்னை, மே 29-

மயிலை கிழக்குப் பகுதி 124வது 'அ' வட்ட பகுதி பிரதிநிதி டி.ரூப்நாத் - ஜி. மஞ்சுளா பாய் ஆகியோரின் மணி விழா நிகழ்ச்சியில் சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு , மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ். முரளி வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை கிழக்குப் பகுதி 124வது வட்ட பகுதிப் பிரதிநிதி டி.ரூப்நாத் - மஞ்சுளா பாய் ஆகியோரின் மணி விழா நிகழ்ச்சி இன்று (29.05.2026) காலை 7 மணிக்கு மேல் மயிலாப்பூர் பொம்மை சத்திரத்தில் மணி விழா நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு, பகுதிச் செயலாளர் எஸ்.முரளி, வட்ட பொறுப்பாளர் மா.பா.அன்பு ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்குகின்றனர்.

மேலும் மயிலை கிழக்கு பகுதியை சார்ந்த மாநில, மாவட்ட, பகுதி நிர்வாகிகள், மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்கிறார்கள் .

# தியாகராயர் நகர் தொகுதி கள ஆய்வு கூட்டம்!

## பகுதிச் செயலாளர்கள் கே.ஏழுமலை – கோ.சு.மணி அறிக்கை!

சென்னை, மே.29-

சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராயர் நகர் தொகுதி கிழக்கு மேற்கு கள ஆய்வு கூட்டம் 29.05.2026 வெள்ளிக்கிழமை காலை 9 மணி மற்றும் மாலை 4 மணி சென்னை 33 மேற்கு மாம்பலம் எல்லையம்மன் கோயில் தெரு சந்திரசேகர் திருமண மண்டபத்தில் சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர். மயிலை த.வேலு முன்னிலையில் மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிசன் இளமகிழன்ஆகியோர் தலைமையில் கள ஆய்வு கூட்டம் நடைபெற உள்ளது.

நிகழ்ச்சிக்கு கீழ்கண்ட நிர்வாகிகள் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம். காலை 9 மணி மணி அளவில் மாவட்ட செயலாளர் பகுதி செயலாளர்கள் தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் மாநில மாவட்ட நிர்வாகிகள் கழக வேட்பாளர் தொகுதி பார்வையாளர் மாவட்ட நிர்வாகிகள் மாநில நிர்வாகிகள் பகுதி நிர்வாகிகள் வட்டச் செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் வட்ட நிர்வாகிகள் கலந்து கொள்ள வேண்டும். மாலை 4.00 மணி அளவில் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பகுதி அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட பிரதிநிதிகள் கலந்து கொள்ள வேண்டும். மேற்கண்ட நிகழ்ச்சியில் தாங்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு பகுதிச் செயலாளர்கள் கே.ஏழுமலை, கோ.சு.மணி தெரிவித்துள்ளனர்.

# மயிலை 125வது வட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## வட்டச் செயலாளர் அ.தவநேசன் அறிக்கை!

சென்னை, மே 29

மயிலை 125வது வட்டச் செயலாளர் அ.தவநேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மயிலை 125 வது வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள் பகுதி கழக நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதிகள் - நாளை (30.5.2026 சனிக்கிழமை) காலை - 9.30 மணியளவில் சித்திரைகுளம், பி.கே. மகாலில் தலைமை கழக பொறுப்பாளர்கள் தலைமையில் நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் மற்றும் மாலை அணிகளின் நிர்வாகிகள் மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் பகுதி அமைப்பாளர்கள் உடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெறும் மற்றும் வருகின்ற 3.6.2026 முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா குறித்து ஆலோசனை கூட்டம் வட்ட கழக அவைத்தலைவர் ஆர். அழகேந்திரன் தலைமையில் மாலை 7 , மணியளவில் வட்ட கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது. எனவே அனைத்து கழக நிர்வாகி கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கவும்.

தலைவர் கலைஞர் பிறந்தநாள் விழா வரும் 3.6.2026 அன்று நடைபெற உள்ளது அது குறித்து ஆலோசனை கூட்டம் வட்ட கழக அலுவலகத்தில் மாலை 7 மணியளவில் இன்று (29.5.2026) நடைபெறும் கழக நிர்வாகிகள் தவறாமல் வருகை தரவும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் அ.தவநேசன் கேட்டுக்கொண்டுள்ளார்.




ஆலந்தூர் வடக்கு பகுதி 158வது வட்டம் வட்ட இளைஞர் அணி, மாணவரணி, பாக இளைஞரணி ஆலோசனைக் கூட்டம் நேற்று (28–5–2026) மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் குமரன் தலைமையில் நடைபெற்றது. இதில் இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், மாணவரணி துணை அமைப்பாளர் கலாநிதி குணாளன் பகுதி அவைத் தலைவர் டில்லி பாபு மாமன்ற உறுப்பினர் பாரதி குமரன் பகுதி அமைப்பாளர் பிரவீன் குமார் துணை அமைப்பாளர் சந்தோஷ் சகோ மற்றும் மாணவரணி இளைஞர் அணி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### சேலம் மாநகராட்சிப் பகுதிகளில்

# த.வெ.க.வினர் ரீல்ஸ் எடுத்து மிரட்டுகிறார்கள்!

## மாமன்ற உறுப்பினர்கள் புகார்!

சேலம், மே 29 -

சேலம் மாநகராட்சி பகுதிகளில் த.வெ.க.வினர் ரீல்ஸ் எடுத்து மிரட்டுகிறார்கள் என மாமன்ற உறுப்பினர்கள் புகார் கூறுகின்றனர்.

சேலம் மாநகராட்சி மன்ற கூட்டம் மேயர் ஆ. ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் தெய்வலிங்கம் மாமன்ற உறுப்பினர் த.வெ.க.வினர் வார்டுக்குள் அத்துமீறி நுழைந்து ஆய்வு என்ற பெயரில் ரீல்ஸ் போட்டு அட்டகாசம் செய்வதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதை தடுக்க மாநகராட்சி சார்பாக சுற்றறிக்கை அனுப்ப வேண்டும்.


தனியாருக்கு குடிநீர் வழங்கும் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்று மாமன்ற உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டனர்.

இதற்கு பதில் அளித்த மேயர் ஆ ராமச்சந்திரன் உறுப்பினர்களின் வேண்டு கோளை பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

### மொழிப்போர் வீரர் - தனித் தமிழ்ப் போராளி

# பேராசிரியர் மு.திருமாவளவன் மறைவு!

## கழகத்தினர் - தமிழ் சான்றோர்கள் அஞ்சலி!



சென்னை, மே 29 -

1965 அண்ணாமலை பல்கலைக் கழக மொழிப் போர் வீரர் - சென்னை மாநிலக் கல்லூரி மேனாள் ஆங்கிலப் பேராசிரியர் - தன்மானத் தனித் தமிழ்ப் பொதுவுடைமைப் போராளி பேராசிரியர் மு.திருமாவளவன் அவர்கள் 28.05.2026 ஆம் நாள் சென்னையில் இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல் அறிந்ததும் கழகத் தோழர்கள், தமிழ் சான்றோர்கள் மற்றும் சூலூர் பாவேந்தர் பேரவையின் சார்பில் இறுதி அஞ்சலி செலுத்தினர்.



சென்னை மாநகர் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்றச் சங்க பொதுச் செலாளர் பெரம்பூர் த. ஆறுமுகம் தலைமையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாள் விழா சிறப்பாக கொண்டாடிட CMBT யில் ஆலோசனை கூட்டம் 26.5.2026 அன்று நடைபெற்றது, இக்கூட்டத்தில் கழக தொழிலாளர் அணி செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ், கழக தொழிலாளர் அணி துணை செயலாளர் பிடிசி வை. பாலு பொருளாளர் எம்.பெருமாள், ஆர்.கந்தன் நெடுஞ்செழியன் மற்றும் பணிமனை நிர்வாகிகள், சுப்ரமணி, சித்திரை கேசவலு, சக்திவேல் பாலசுப்ரமணி, நாராயணசாமி, லில்லிராம், செல்வமணி, பாலாஜி, மதன கோபால் ஆகியார் கலந்து கொண்டனர்.

### கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் – ஓசூர் கிழக்கு

# ஒன்றியச் செயலாளர் டாக்டர் லோகேஷ் மறைவு!

## ஒய்.பிரகாஷ் – கழகத்தினர் அஞ்சலி!



கிருஷ்ணகிரி, மே 29 -

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு.க., ஓசூர் கிழக்கு ஒன்றியச் செயலாளரும், தேசிய கபாடி வீரருமான டாக்டர் லோகேஷ் ரெட்டி, உடல்நலக் குறைவு காரணமாக இயற்கை எய்தினார். இவருக்கு வயது 54.

அவரது உடலுக்கு கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஒய். பிரகாஷ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் சீனிவாசன் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் என ஏராளமான கழகத்தினர் நேரில் அஞ்சலி செலுத்தினார்கள்.

மறைந்த லோகேஷ் ரெட்டிக்கு வித்யா (48) என்ற மனைவியும், ஷசாங்க் (25) என்ற மகனும் உள்ளனர். அவரது மகன் பி.எச்.டி படித்து வருகிறார்.

லோகேஷ் ரெட்டியின் மறைவு குறித்து மேற்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ் தனது அறிக்கையில்,


அன்னாரது மறைவு கழகத்தினருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் பேரிழப்பாகும்.

அவரது ஆத்மா சாந்தியடையவும், அவரது குடும்பத்தினருக்கு என்றும் திராவிட முன்னேற்றக் கழகம் உறுதுணையாக இருக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கே. மன்னப்பன்

## மே 29 (2021)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

நெருக்கடி காலத்தில் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்தபோதும் கழகத்தின்மீது உறுதியாக பற்றுடன் திகழ்ந்தார்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**